©
தமிழ்நாடு அரசு 2009

கையெழுத்துத் தொடர்

## நிதித் (ஓய்வூதியம்) துறை

## அரசாணை எண்.113, நாளது மார்ச் 21, 2009
## (பங்குனி 8, திருவள்ளுவர் ஆண்டு 2040)

**ஓய்வூதியம் –** ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு அகவிலைப்படி – 1-1-2009 ஆம் நாள் முதற்கொண்டு திருத்தப்பட்ட வீதத்தில் அனுமதித்தல் – ஆணைகள் – வெளியிடப்படுகின்றன.

**பின்வருவனவற்றைப் படிக்கவும்:–**

1. அரசாணை (நிலை)எண்.493, நிதி (ஓய்வூதியம்)த் துறை, நாள்: 13-11-2008.
2. அரசாணை (நிலை) எண்.111, நிதி (படிகள்)த் துறை, நாள்: 21-03-2009.

-oOo-

ஆணை

மேலே பார்வை 1–ல் படிக்கப்பட்ட அரசாணையில் மாநில அரசு ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு கீழ்க்கண்டவாறு திருத்தப்பட்ட அகவிலைப்படி வீதத்தை வழங்கி ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன:-

| எந்நாளிலிருந்து வழங்கத்தக்கது | திருத்தியமைக்கப்பட்ட அகவிலைப்படி வீதம் (மாதம் ஒன்றுக்கு) |
|---|---|
| **1-7-2008** | ஓய்வூதியம் மற்றும் அகவிலை ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம் மற்றும் அகவிலை குடும்ப ஓய்வூதியத்தில் 54 சதவீதம் |

மேற்கண்ட அரசாணையில், மாநில அரசு மற்றும் முன்னாள் மாவட்ட வாரியத்தின் வருங்கால வைப்பு நிதிக்குத் தொகை செலுத்திய / ஓய்வூதியம் அல்லாத பணியாளர் அமைப்பைச் சேர்ந்த பயனாளிகளான இறந்து விட்ட பணியாளர்களின் மனைவியர் மற்றும் குழந்தைகளுக்கு, அடிப்படை கருணைத் தொகை மற்றும் அகவிலை கருணைத் தொகையில் 46 சதவீதத்திற்கு அகவிலைப்படி வீதம் திருத்தி அமைக்கப்பட்டு 1-7-2008 முதற்கொண்டு அதனை வழங்க ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன.

**2.** மாநில அரசு தற்போது ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு 1-1-2009 ஆம் நாள் முதற்கொண்டு, ஒரு கூடுதல் தவணையாக 10 சதவீதம் அகவிலைப்படி வழங்க முடிவு செய்துள்ளது. அதன்படி, மாநில அரசு ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு கீழ்க்கண்டவாறு திருத்தியமைக்கப்பட்ட அகவிலைப்படி வீதத்தில் வழங்கி ஆணையிடுகிறது.

| எந்நாளிலிருந்து வழங்கத்தக்கது | திருத்தியமைக்கப்பட்ட அகவிலைப்படி வீதம் (மாதம் ஒன்றுக்கு) |
|---|---|
| **1-1-2009** ஆம் நாளிலிருந்து | ஓய்வூதியம் மற்றும் அகவிலை ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம் மற்றும் அகவிலை குடும்ப ஓய்வூதியத்தில் 64 சதவீதம் |

த.பி.பா.

மாநில அரசு மற்றும் முன்னாள் மாவட்ட வாரியத்தின் வருங்கால வைப்பு நிதிக்குத் தொகை செலுத்திய / ஓய்வூதியம் இல்லாத பணியாளர் அமைப்பைச் சேர்ந்த பயனாளிகளான இறந்து விட்ட பணியாளர்களின் மனைவியர் மற்றும் குழந்தைகளுக்கு, அடிப்படைக் கருணைத் தொகை மற்றும் அகவிலை கருணைத் தொகையில் **56** சதவீதத்திற்கு அகவிலைப்படி வீதம் திருத்தியமைக்கப்பட்டு 1-1-2009 முதற்கொண்டு அதனை வழங்கி அரசு ஆணையிடுகிறது.

**3.** பொதுத்துறை நிறுவனம் / தன்னாட்சி நிறுவனம் / உள்ளாட்சி அமைப்பு / கூட்டுறவு நிறுவனம் முதலியவற்றில் ஒட்டுமொத்த தொகை பெற்ற ஓய்வூதியத்தை தொகுத்து பெறும் தொகையில் மூன்றில் ஒரு பங்கு தொகையைத் திரும்பப் பெறும் தகுதியுள்ள / திருத்தியமைக்கப்பட்ட வீதத்தில் திரும்பப்பெறும் தொகை பெற தகுதியுள்ள மாநில அரசுப் பணியாளர்களின் முழு ஓய்வூதியத் தொகைக்கு முழு ஓய்வூதியம் மற்றும் அகவிலை ஓய்வூதியத்தில் **64** சதவீத அகவிலைப்படி **1–1–2009** முதல் பெறத் தகுதியுடையவராவர்.

**4.** மேற்குறிப்பிட்ட வகையினங்களைச் சார்ந்த ஓய்வூதியர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியர்களுக்கு உயர்த்தப்பட்ட வீதத்திலான அகவிலைப்படி 1-1-2009 முதல் ரொக்கமாக வழங்கப்படும்.

**5.** சனவரி மற்றும் பிப்ரவரி **2009** ஆம் மாதங்களுக்கான அகவிலைப்படி நிலுவைத் தொகை மார்ச் 2009 ஆம் மாத ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம் பெற்ற பின்னரே வழங்கப்பட வேண்டும்.

**6.** அகவிலைப்படியைக் கணக்கிடுகையில் பின்னத்தில் வருமாயின் அதை அடுத்த ஒரு ரூபாயாக கொள்ளப்பட வேண்டும். ஒவ்வொரு தனி நபருக்கும் கொடுக்கப்பட வேண்டிய அகவிலைப்படியை கணக்கிடுவது பொதுத்துறை வங்கிகள் உள்ளிட்ட ஓய்வூதியம் வழங்கும் அதிகாரிகளின் பொறுப்பாகும்.

**7.** மாநில கணக்குத்துறை தலைவரிடமிருந்து முறைப்படியான அனுமதி பெறும் வரை காத்திராமல் சென்னை–**6**, ஓய்வூதியம் வழங்கும் அதிகாரி / கருவூல அதிகாரிகள் மற்றும் சம்பந்தப்பட்ட பொதுத்துறை வங்கிகள் நேரடியாக அகவிலைப்படியை வழங்கலாம்.

**8.** இந்த ஆணை கீழ்க்கண்ட வகைகளைச் சேர்ந்த ஓய்வூதியதாரர்களுக்கு பொருந்தும்.

i) அரசு ஓய்வூதியதாரர்கள், அரசு உதவி பெறும் மற்றும் உள்ளாட்சி மன்ற கல்வி நிறுவனங்களின் ஓய்வூதியம் பெறும் ஆசிரியர்கள் மற்றும் உள்ளாட்சி மன்றங்களின் ஏனைய ஓய்வூதியதாரர்கள்.

ii) தற்போதைய மற்றும் எதிர்கால குடும்ப ஓய்வூதியர்கள், பகிர்வு முறையில் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களைப் பொறுத்தவரையில் அகவிலைப்படி விகிதாச்சாரத்திற்கிணங்க பிரிக்கப்படலாம்.

iii) 1-11-1956 ஆம் நாளன்று, தமிழ் நாடு மாநிலத்திற்கு மாற்றப்பட்ட பகுதிகளில் அதாவது கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தின் செங்கோட்டை வட்டத்தில் அமைந்துள்ள கருவூலங்களில், அதே நாளில், ஓய்வூதியம் பெறுகின்ற முந்தைய திருவாங்கூர்–கொச்சி மாநில ஓய்வூதியதாரர்கள்.

iv) 1-10-1953 ஆம் நாளுக்கு முன்னர் பிரிக்கப்படாத சென்னை மாநிலத்தாலும் 1-4-1960 ஆம் நாளுக்கு முன்னர் ஆந்திரபிரதேச மாநிலத்தாலும் அனுமதி வழங்கப்பட்டு திருத்தணி சார்கருவூலத்தில் 1-4-1960 ஆம் நாள் முதற்கொண்டு ஓய்வூதியம் பெற்றுவருகின்ற ஓய்வூதியதாரர்கள்.

v) ஒருங்கு திரட்டிய ஓய்வூதியம் பெறுகிற (Mustering out Pension) முன்னாள் மாநில ஆளுநரின் தலைமைப் பணியிட ஓய்வூதியதாரர்கள்.

vi) தமிழ்நாடு சிறப்பு ஓய்வூதிய விதிகளின்கீழ் சிறப்பு ஓய்வூதியம் மற்றும் கருணைப்படி பெறும் ஓய்வூதியதாரர்கள்.

vii) முந்தைய புதுக்கோட்டை ஓய்வூதியதாரர்கள்.

viii) கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தில் செங்கோட்டை வட்டத்தின் மாற்றப்பட்ட பகுதிகளில், சரண் செய்யப்பட்ட மற்றும் நீக்கப்பட்ட ஆசிரியர்கள்.

**9.** ஓய்வூதியதாரர்களுக்கும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கும் வழங்கத்தக்க அகவிலைப்படி குறித்த செலவினங்கள் முறையே கீழ்க்காணும் கணக்குத் தலைப்புகளில் பற்று வைக்கப்படும்.

"2071. ஓய்வூதியங்கள் மற்றும் ஏனைய பணி ஓய்வுகாலப் பயன்கள் – 01. சிவில்– 101. வயது முதிர்வு – பணி ஓய்வுக்காலப் படிகள் I. திட்டத்தில் சேராதது – AC. ஓய்வூதியதாரர்களுக்கு அகவிலைப்படி – 03. அகவிலைப்படி (தகவல் தொகுப்பு குறியீட்டு எண் 2071 01 101 AC 0306)"

"2071. ஓய்வூதியங்கள் மற்றும் ஏனைய பணி ஓய்வுகாலப் பயன்கள் – 01. சிவில் – 105. குடும்ப ஓய்வூதியம் – I. திட்டத்தில் சேராதது – AC. தமிழ்நாடு அரசு குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு அகவிலைப்படி – 03. அகவிலைப்படி (தகவல் தொகுப்பு குறியீட்டு எண் 2071 01 105 AC 0308)"

**10.** திங்களொன்றுக்கு ரூ.605/– தொகை பெறுவோரின் அகவிலைப்படி குறித்த செலவினம் "2071. ஓய்வூதியங்கள் மற்றும் ஏனைய பணி ஓய்வுகாலப் பயன்கள் – 01. சிவில் – 800. ஏனைய செலவு – I. திட்டத்தில் சேராதது – AH. வருங்கால வைப்பு நிதிக்கு தொகை செலுத்திய / ஓய்வூதியம் இல்லாத பணியாளரமைப்பைச் சேர்ந்த பயனாளிகளான இறந்துவிட்ட பணியாளர்களின் குடும்பங்களுக்குக் கருணைத் தொகை வழங்குதல் – 27. ஓய்வூதியங்கள் – 09. ஏனையவை (தகவல் தொகுப்பு குறியீட்டு எண் 2071 01 800 AH 2795)" என்னும் கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்கப்படும்.

**11.** இந்த ஆணையில் அகவிலைப்படி அனுமதித்ததன் காரணமாக அதிகரித்துவிட்ட செலவினம், 1956–ம் ஆண்டு மாநில மறுசீரமைப்புச் சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்ட விதித்துறைகளுக்கிணங்க, அடுத்து வரும் மாநிலங்களுக்கிடையே பிரித்துக்கொள்ளத் தக்கதாகும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**கு. ஞானதேசிகன்**
**அரசு முதன்மைச் செயலாளர்**

பெறுநர்
அனைத்து அரசுச் செயலாளர்கள்.
தலைமைச் செயலகத்தின் அனைத்து துறைகள்.
சட்டமன்ற பேரவைச் செயலகம், சென்னை–600 009.
ஆளுநரின் செயலகம், ராஜ்பவன், சென்னை–600 032.
அனைத்துத் துறைத் தலைவர்கள்.
மாநில தகவல் ஆணையம், 378, அண்ணாசாலை,
தேனாம்பேட்டை, சென்னை–600 018
மாநில கணக்குத் துறைத் தலைவர் (கணக்குகள் மற்றும் உரிமைத்தொகை),
சென்னை–600 018. (பெயரில்)
முதன்மை மாநில கணக்குத் துறைத் தலைவர் (தணிக்கை-I),
சென்னை–600 018.
மாநில கணக்குத் துறைத் தலைவர் (தணிக்கை-II), சென்னை–600 018.
மாநில கணக்குத் துறைத் தலைவர் (CAB), சென்னை–600 009.

பதிவாளர், உயர்நீதிமன்றம், சென்னை– 600 104.
செயலாளர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், சென்னை.600 002.
மாநகராட்சி ஆணையர், சென்னை / மதுரை / கோயம்புத்தூர் /
திருச்சிராப்பள்ளி / சேலம் / திருநெல்வேலி / ஈரோடு / திருப்பூர்.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் / மாவட்ட நீதிபதிகள் / முதன்மை
நீதித்துறை மாஜிஸ்ட்ரேட்டுகள்.
ஓய்வூதியம் வழங்கும் அலுவலர், சென்னை–600 006.
அனைத்து கருவூல அலுவலர்கள்/அனைத்து துணைக் கருவூல அலுவலர்கள்.
அனைத்து மாநிலக் கழகங்கள் / நிறுவனங்கள்.

<u>நகல் பெறுநர்</u>:
நிதி (அ.ந.மு.I / அ.ந.மு.II / அ.ந.மு.III / பல்வகை / ஓ.கு.தீ / ஊ.கு. / வரவு செலவு–பொது II /
வரவு செலவு–பல்வகை / பொது)த் துறை, சென்னை–9.
முதலமைச்சரின் தனிச் செயலாளர், சென்னை–600 009.
ஓய்வூதிய இயக்குநர், டி.எம்.எஸ். வளாகம், சென்னை–600 006.
கருவூல கணக்கு ஆணையர், சென்னை–600 015.
உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர், சென்னை–600 108.
அனைத்து நகராட்சி ஆணையர்கள்.
அனைத்து ஊராட்சி ஒன்றிய ஆணையர்கள்.
இந்திய ரிசர்வ் வங்கி, சென்னை – 600 001.
இந்திய ரிசர்வ் வங்கி, அரசு மற்றும் வங்கிகள் கணக்குத் துறை,
மும்பை–400 051 (75 நகல்கள்)
பொதுத்துறை வங்கிகளின் அனைத்து தலைமை அலுவலகங்கள் / மண்டல அலுவலகங்கள் –
ஓய்வூதிய இயக்குநர், டி.எம்.எஸ். வளாகம்,
சென்னை–600 006. மூலமாக.
தலைவர், தமிழ்நாடு ஓய்வூதியர் சங்கம், டி.பி.ஐ. வளாகம், கல்லூரிச் சாலை,
சென்னை–600 006.
தலைவர், தமிழ்நாடு தலைமைச் செயலக ஓய்வுபெற்ற அலுவலர்கள் சங்கம்,
மேடவாக்கம் டேங்க் சாலை, கீழ்பாக்கம், சென்னை–600 010.
தலைவர், அனைத்திந்திய ஓய்வுபெற்றோர் சங்கக் கூட்டமைப்பு, 22, கவரத் தெரு, மேற்கு
சைதைப்பேட்டை, சென்னை–600 015.
தலைவர், ஓய்வுபெற்ற ஆசிரியர் சங்கம், எண் 12, அபயாம்பாள்புரம், மயிலாடுதுறை,
நாகப்பட்டினம் மாவட்டம்.
மாநிலத் தலைவர், அகில பாரத குடிமை பெற்றோர் மற்றும் ஓய்வூதியர் அமைப்பு,
எண் 7, பாரதிதாசன் சாலை, அவினாசி, கோயம்புத்தூர் மாவட்டம்.
தலைவர், இந்திய அதிகாரிகள் சங்கம், எண் 35, திரு.வி.க. நெடுஞ்சாலை,
இராயப்பேட்டை நெடுஞ்சாலை, சென்னை– 600 014.
தலைவர், தமிழ்நாடு முதியோர் குடியுரிமை பெற்றோர் சங்கம், எண் வி 95,
அண்ணா நகர், சென்னை– 600 040.
தலைவர், தமிழ்நாடு முதுநிலை குடியுரிமை பெற்றோர் மற்றும் ஓய்வூதியர்கள் சங்கம், எண் 38–பி,
பிரதான சாலை, பெருமாள்புரம், திருநெல்வேலி.
தலைவர், ஓய்வுபெற்ற அலுவலர் சங்கம், எண் 158, பெல்ஸ் சாலை,
சென்னை–600 005.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்கள்.

–/ ஆணைப்படி : அனுப்பப்படுகிறது /-

21.03.09

**பிரிவு அலுவலர்.**